# மணவிழாவில் பெற்றோர்களுக்கு முதல்வர் வேண்டுகோள்!

முதல் பக்கத் தொடர்ச்சி!

இந்த இயக்கத்தில் தன்னை ஒப்படைத்துக் கொண்டு பாடுபட்டுக் கொண்டிருப்பவர்.

நான் இந்தக் கொளத்தூர் தொகுதியில் சட்டமன்றத் தேர்தல் வேட்பாளராக நிறுத்தப்பட்டபோது, எனக்குத் துணை நின்று, என்னுடைய வெற்றிக்கு உழைத்தவர்களில் மிக முக்கியமானவர்களில் ஒருவராக நம்முடைய முரளி அவர்கள் இருக்கிறார்கள். "எப்படி இருக்கிறது தொகுதி?" என்று அவரிடத்தில் நான் கேட்பேன்… "எதற்கும் கவலைப்பட வேண்டாம். நீங்கள் வரவே வேண்டியதில்லை. வீட்டிலேயே இருங்கள். நாங்கள் வெற்றி பெற்று உங்களிடத்தில் கொடுக்கிறோம்"; அவ்வாறு சொல்லிவிட்டு, இந்தத் தெருவிற்கு வரவில்லை, அந்த தெருவிற்கு வரவில்லை என்று அழைப்பார். அது வேறு! அது நான் ஏதோ வெற்றி பெறுவதற்காக மட்டுமல்ல, கழகத் தோழர்கள் அந்தத் தெருவில்கூட என்னைக் காண வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். அதற்காக நீங்கள் வாருங்கள் என்றுதான் அழைப்பார். அப்படி எல்லாம் பணியாற்றுபவராக விளங்கிக் கொண்டிருப்பவர் நம்முடைய முரளி அவர்கள்.

அது மட்டுமல்ல, எங்காவது இடைத்தேர்தல் வந்துவிட்டால் அந்த இடைத்தேர்தலில் பணியாற்றுவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலிருந்து, ஒவ்வொரு பகுதியிலிருந்து நம்முடைய கழகத் தோழர்களை நாம் அனுப்பி வைப்பதுண்டு. அவ்வாறு அனுப்பி வைக்கும் நேரத்தில் யார் பணியாற்றுவார்கள்? யார் செயலாற்றுவார்கள்? என்பதை தெரிந்து, அவர்களைக் கண்டுபிடித்து அனுப்புவோம். அவ்வாறு தேடிக் கண்டு பிடித்து அனுப்பக் கூடியவர்களில் மிக முக்கியமான ஒருவர் நம்முடைய ஐ.சி.எப். முரளி அவர்கள்.

### போட்டி போட்டுக் கொண்டு பணியாற்றுகின்றனர்

நான் முரளி அவர்களைச் சொல்வதைப் பார்த்து, நாகராஜன் அவர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. நாகராஜனும் இங்கு அமர்ந்திருக்கிறார். அவரும் சளைத்தவர் அல்ல. இரண்டு பேரும் போட்டி போட்டுக் கொண்டு இந்தத் தொகுதியில் பணியாற்றுகிற காரணத்தினால்தான் நான் இந்த தொகுதியில் நல்ல பெயரை வாங்கிக் கொண்டிருக்கிறேன். கொளத்தூரில் ஒரு செல்லப் பிள்ளையாக அனைவரும் விரும்பும் ஒரு சட்டமன்ற உறுப்பினராக, எனக்கு இந்தப் பெயர் கிடைத்திருக்கிறது என்று சொன்னால், அது தனிப்பட்ட ஸ்டாலினால் அல்ல; முரளி போன்றவர்கள், நாகராஜன் போன்றவர்களின் உழைப்பினால்தான் இது கிடைத்திருக்கிறது. அதை நான் என்றைக்கும் மறந்துவிட மாட்டேன்.

> "இந்தத் தொகுதியில் பணியாற்றுகிற காரணத்தி-னால்தான் நான் இந்த தொகுதியில் நல்ல பெயரை வாங்கிக் கொண்டிருக்கிறேன். கொளத்தூரில் ஒரு செல்லப் பிள்ளையாக - அனைவரும் விரும்பும் ஒரு சட்டமன்ற உறுப்பினராக, எனக்கு இந்தப் பெயர் கிடைத்தி-ருக்கிறது என்று சொன்னால், அது தனிப்பட்ட ஸ்டாலினால் அல்ல; முரளி போன்றவர்கள், நாகராஜன் போன்றவர்களின் உழைப்பினால்தான் இது கிடைத்திருக்கிறது."

எனவே, அந்த நன்றி உணர்வோடுதான், இந்தத் திருமணத்தை பொருத்தவரையில், இதை நம்முடைய வீட்டுத் திருமணமாகக் கருதி இந்த மணவிழா நிகழ்ச்சியில் நான் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துவதற்காக வந்திருக்கிறேன். உங்களோடு சேர்ந்து நானும் மணமக்களை வாழ்த்துகிறேன்.

புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லி இருக்கும், "வீட்டிற்கு விளக்காய், நாட்டிற்கு தொண்டர்களாய்" இருந்து மணமக்கள் வாழ்க… வாழ்க என்று வாழ்த்துகிறேன்.

அதே நேரத்தில் மணமக்களை நான் அன்போடு கேட்டுக் கொள்ள விரும்புவது, மணமகன் பெயரை, மணமகள் பெயரை நான் பார்க்கிற போது, எனக்குக் கொஞ்சம் சங்கடமாக இருக்கிறது. ஏனென்றால் தமிழ்ப் பெயர்களாக இல்லை. இருந்தாலும் பரவாயில்லை, உங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள். அதுதான் என்னுடைய அன்பான வேண்டுகோள்.

குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்கிற போது, உடனடியாக அதில் நீங்கள் இறங்கிவிட வேண்டாம். பொறுத்து, நிதானமாக அளவோடு பெற்று வளமோடு வாழ வேண்டும் என்பது குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரச்சாரம்.

அதை நாம் தொடர்ந்து கடைபிடித்த காரணத்தினால்தான், இன்றைக்குத் தொகுதி மறுசீரமைப்பு வருகிறபோது, நாடாளுமன்றத் தொகுதிகள் குறைக்கப்படும் சூழல் ஏற்பட்டிருக்கிறது.

### மும்மொழிக் கொள்கையை ஒரு போதும் ஏற்கமாட்டோம்

மும்மொழிக் கொள்கையை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. இருமொழிக் கொள்கைதான் எங்களுக்கு வேண்டும் என்று சொல்லும் ஆற்றல் நாம் பெற்றோம். ஐந்தாயிரம் அல்ல, பத்தாயிரம் கோடி ரூபாய் கொடுத்தாலும் நாங்கள் மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்ள மாட்டோம். அதில் கையெழுத்து போட மாட்டேன் என்று நான் தெளிவாகச் சொல்லி இருக்கிறேன்.

நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், நீங்கள் பெற்றுக் கொள்ளும் குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள். நிச்சயமாக என்னிடம்தான் கொண்டு வந்து பெயர் சூட்டச் சொல்லுவார்கள். அதுவும் எனக்குத் தெரியும். இங்கு சொன்னார்; எங்கள் வீட்டில் இரண்டாவது திருமண விழாவுக்கு வந்திருக்கிறார் என்று சொன்னார். இரண்டாவது மணவிழா மட்டுமல்ல, உங்கள் பேரன், பேத்தி திருமணத்திற்கும் நான்தான் வந்து வாழ்த்துவேன். அந்த வாழ்த்தோடு, அந்த உணர்வோடு இன்றைக்கு மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்கள் அனைத்து நன்மைகளையும் பெற்று சிறப்போடு வாழ்வாங்கு வாழ்க… வாழ்க என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



புதுச்சேரி மாநிலம், முத்தியால்பேட்டை தொகுதியில் தி.மு.க. சார்பில் இரண்டு முறை போட்டியிட்டு வெற்றி பெற்றவர் நந்தா. சரவணன். இடையில் மாற்றுக்கட்சிக்கு சென்றாலும், கடந்த ஒரு வருடமாக மாநில கழக அமைப்பாளர் இரா. சிவா தலைமையிலான தி.மு.க.–வில் மீண்டும் இணைந்து முத்தியால்பேட்டையில் கழகப் பணியையும், மக்கள் சேவையையும் ஆற்றி வருகிறார். இந்நிலையில் கடலூர் மாவட்டத்தில் நடைபெறும் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக புதுச்சேரி வருகை புரிந்த கழகத் தலைவர், தமிழ்நாடு திராவிட மாடல் அரசின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், தம்மை அதிகாரப்பூர்வமாக மீண்டும் கழகத்தில் இணைத்துக் கொண்டார். அப்போது, அமைச்சர்கள் முனைவர்.க. பொன்முடி, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சி.வெ. கணேசன், புதுச்சேரி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஏ.எச்.எம். நாஜிம், அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார், திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் வி. அனிபால் கென்னடி, இரா. செந்தில்குமார், எல். சம்பத், நாக. தியாகராஜன், பொதுக்குழு உறுப்பினர் எஸ். கோபால் ஆகியோர் உடனிருந்தனர்.

# கடலூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அறிக்கை!

*கடலூர், பிப்.24-*

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம். வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கடலூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.



இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

இன்று (24.02.2025 - திங்கள்கிழமை மாலை 3 மணி அளவில் குறிஞ்சிப்பாடி திமுக அலுவலகத்தில் கடலூர் கிழக்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் து.தங்கராசு தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் கடலூர் கிழக்கு மாவட்டத்தை சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாநகர மேயர், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய அணிகளின் மாவட்ட நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

மார்ச் 1 தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குவது சம்பந்தமாக.

கழக ஆக்கப் பணிகள் சம்பந்தமாக.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# நெல்லை மத்திய மாவட்டக்கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் மு. அப்துல்வகாப் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*நெல்லை, பிப்.24-*

நெல்லை மத்திய மாவட்ட கழக செயல் வீரர்கள் கூட்டம் நாளை (25 ஆம் தேதி) பாளையங்கோட்டை ரஹ்மத் நகர் இதயா மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது. இந்நிகழ்வில் கழக முதன்மை செயலாளர்,நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சரும் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே.என். நேரு பங்கேற்று சிறப்பிக்க உள்ளார் என நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் எம். எல்.ஏ. அறிக்கையில் கூறியுள்ளார்.



அதில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அன்புத்தளபதியார் அவர்களின் அறிவுறுத்தலின்படி கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டு தலின்படி நாளை (25.02.2025 திங்கள் கிழமை)காலை சரியாக 10.00 மணிக்கு,மாவட்ட நீதிமன்றம் எதிரிலுள்ள, பாளையங்கோட்டை ரஹ்மத் நகர்,இதயா மஹால் திருமண மண்டபத்தில், நெல்லை மத்திய மாவட்டத்தின் செயல்வீரர்கள் கூட்டம் நெல்லை மத்திய மாவட்ட அவைத் தலைவர் வி.கே.முருகன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் கழக முதன்மை செயலாளர்,நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே.என். நேரு பங்கேற்று ஆலோசனைகளை வழங்கி சிறப்பிக்க உள்ளார்.

நிகழ்வில் மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள்,மாநகர நிர்வாகிகள், பகுதி கழக, பேரூர் கழக நிர்வாகிகள், ஒன்றிய நிர்வாகிகள், வட்ட கழக, கிளை கழக நிர்வாகிகள், கழக சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள்,பாக முகவர்கள்,கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் பிறந்தநாள் நிகழ்ச்சிகள் தொடர்பாக.

கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாடு காவல்துறையில் பாலியல் புகார்களை விசாரிக்கும் விசாகா கமிட்டி

## மறு சீரமைத்து டி.ஜி.பி சங்கர் ஜிவால் உத்தரவு!

*சென்னை, பிப்.24-*

தமிழ்நாடு காவல்துறையில் பாலியல் புகார்களை விசாரிக்கும் விசாகா கமிட்டி டிஜிபி சீமா அகர்வால் தலைமையில் காவல் துறை அதிகாரிகள் உள்ளடக்கிய குழு செயல்பட்டு வருகிறது. இக்குழுவில் உறுப்பினராக இருந்த சென்னை காவல்துறை துணை ஆணையர் சக்தி கணேசன், அயலகப் பணிக்கு பணி மாறுதலாக சென்ற நிலையில் அந்த இடத்தை நிரப்ப முடிவு செய்யப்பட்டது. அதன்படி, காவல்துறையில் பாலியல் புகார்களை விசாரிக்கும் விசாகா கமிட்டியை மறுசீரமைப்பு செய்யப்பட்டு புதிய உறுப்பினர் நியமித்து டிஜிபி சங்கர் ஜிவால் உத்தரவிட்டுள்ளார். இந்தக்குழுவின் தலைவராக டி.ஜி.பி சீமா அகர்வால் ஐ.பி.எஸ் தலைவராக தொடர்வார் என கூறப்பட்டுள்ளது. சென்னை காவல்துணை தலைமையக கூடுதல் ஆணையர் கபில் குமார் சார்த்கர், தலைமயக ஐ.ஜி சாமூண்டீஸ்வரி ஐ.பி.எஸ்., CBCID SP சண்முக பிரியா, தலைமையக அதிகாரி ரவிச் சந்திரன், சர்வதேச நீதிக்குழு மேலாண்மை அதிகாரி லொரேட்டா ஜோனா ஆகியோர் இந்தக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் ஆகியோர் ஆணைக்கிணங்க திருக்கோவிலூர் தொகுதியில் அரங்கண்டநல்லூர் பகுதியில் மாபெரும் விளையாட்டு ஸ்டேடியம் அமைப்பதற்கான மைதானத்தை வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மாவட்ட செயலாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி, மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், தயா இளந்திரையன், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் மு. தங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் அப்துல் சலாம், ஒன்றிய செயலாளர் அ.சா.ஏ.பிரபு , பேரூராட்சி மன்ற தலைவர் எஸ்.அன்பு பேரூர் செயலாளர் சுந்தரமூர்த்தி, நகர செயலாளர் கோபி கிருஷ்ணன், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் மாலதி, துணைத்தலைவர் குணா உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.




## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

### ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–3 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற்று வருகிறது. மூன்றாம் கட்டமாக திருவண்ணாமலை தெற்கு, திருவண்ணாமலை வடக்கு & வேலூர் ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 26.02.2025 புதன்கிழமை | காலை 9.00 மணி | வேலூர் | எல்.கே.என். மஹால், காட்பாடி – குடியாத்தம் சாலை, லத்தேரி, வேலூர் |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 21-02-2025

